செ.வெ.எண்-52 நாள்-26.03.2019

# அரியலூர் மாவட்டத்தில் 2866 வாக்குப்பதிவு மைய அலுவலர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்துவது குறித்த பயிற்சி அளிக்கப்படும் பயிற்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நாடாளுமன்ற தேர்தல் 2019-க்கான வாக்குப்பதிவு மைய அலுவலர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM), வாக்குப்பதிவினை உறுதிசெய்யும் இயந்தரம் (VVPAT) பயன்படுத்துவது குறித்த பயிற்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார்கள்.

**இப்பயிற்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

நாடாளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதையொட்டி, 15.03.2019 அன்று தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு மையங்களில் பணியாற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் 2866 நபர்களுக்கு 149.அரியலூர், 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM), வாக்குப்பதிவினை உறுதிசெய்யும் இயந்தரம் (VVPAT) பயன்படுத்துவது குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள 149.அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 297 வாக்குப்பதிவு மையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள 1445 நபர்கள், 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 292 வாக்குப்பதிவு மையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள 1421 நபர்கள் என மொத்தம் 2866 நபர்களுக்கு இன்று (26.03.2019) அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்கு ஜெயங்கொண்டம் பெரியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இப்பயிற்சியில், கோட்டாட்சியர் நா.சத்தியநாராயணன், வட்டாட்சியர் கதிரவன், மண்டல அலுவலர்கள், வாக்குப்பதிவு மைய அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**